தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண்:019344/எம்/இ1/2019, நாள்: 27.08.2019

பொருள்: பள்ளிக்கல்வி- அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் எதிர்பாராத விபத்துக்களினால் இறந்தாலோ அல்லது பலத்த காயங்கள் ஏற்பட்டாலோ பாதிப்பு அடையும் மாணவ/ மாணவியர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண தொகை வழங்குதல்- கருத்துருக்கள் அனுப்பி வைத்தல் சார்பாக கூடுதல் அறிவுரை வழங்குதல்- சார்பு.

பார்வை: அரசாணை (நிலை) எண்:17, பள்ளிக்கல்வித்(ப.க5(2)))துறை, நாள்: 07.02.2018

*************

பார்வையில் காணும் அரசாணையின்படி தமிழகத்தில் உள்ள அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் எதிர்பாராத விபத்துக்களினால் இறந்தாலோ அல்லது பலத்த காயங்கள் ஏற்பட்டாலோ பாதிப்பு அடையும் மாணவ / மாணவியர்களின் குடும்பத்தினருக்கு கீழ்க்கண்டவாறு நிவாரண தொகை பள்ளிக்கல்வித் துறை மூலம் வழங்கப்படுகிறது.

| வ. எண். | விபத்தின் தன்மை | வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | விபத்தில் மரணமடைந்த மாணவர்களுக்கு | ரூ.1,00,000/- |
| 2. | விபத்தில் பலத்த காயம் அடைந்த மாணவர்களுக்கு | ரூ.50,000/- |
| 3. | விபத்தில் சிறிய காயம் அடைந்த மாணவர்களுக்கு | ரூ.25,000/- |

மேற்படி நிவாரண தொகை மாணவ/ மாணவியர்களுக்கு பள்ளிகளிலும் / பள்ளி செல்லும் போதும்/ சுற்றுலா செல்லும் போதும் / பள்ளியின் செயல்பாடுகளின் போதும் எதிர்பாராத விதமாக விபத்துக்களினால் மரணம் / காயம் ஏற்பட்டால் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். மேலும் கீழ்க்காணும் எதிர்பாராத விபத்துக்களினால் பள்ளி மாணவ / மாணவியர்கள் பாதிப்பு அடைந்தாலும் மேற்காணும் விவரப்படி நிவாரண உதவி வழங்கப்படுகிறது.

- மாணவர்கள் பள்ளிக்கு வந்து செல்லும் போது ஏற்படும் விபத்து
- கல்விச் சுற்றுலா செல்லும் போது ஏற்படும் விபத்து
- நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், பாரத சாரண / சாரணியர் இயக்கம் மற்றும் சுற்றுச் சூழல் மன்றங்கள் மூலமாக நடைபெறும் முகாம் மற்றும் பேரணிகளில் கலந்து கொள்ளும்போது ஏற்படும் விபத்து

Scanned by CamScanner

- விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் போது ஏற்படும் விபத்து.
- மின்கசிவு மற்றும் ஆய்வகங்களில் ஏற்படும் விபத்து
- விஷ ஜந்துகளினால் ஏற்படும் விபத்து.
- மாணவரின் விடுமுறை நாட்களில் வெளியே செல்லும் போது நீர்நிலைகளால் ஏற்படும் விபத்து போன்றவை.

மேற்படி காரணங்களுக்காக பாதிப்பு அடைந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி தொகை பெற்று வழங்கக் கோரி முதன்மைக்கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கும் பொழுது கருத்துருக்கள் தகுந்த இணைப்புகள் இல்லாமல் அனுப்பிவைக்கப்படுவதால் காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே, கீழ்க்காணும் இணைப்புகளுடன் கருத்துருக்கள் முழுமையான அளவில் 2 நகல்களில் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைக்கப்பட வேண்டிய நகல்கள் விவரம்.

1. பெற்றோர் / பாதுகாவலரின் விண்ணப்பம்
2. மாணவ/மாணவியர்கள் சார்பான விவரப் படிவம் (Bio–data Form) தலைமையாசிரியர் மூலமாக
3. தலைமையாசிரின் பரிந்துரை கடிதம்.
4. முதல் தகவல் அறிக்கை நகல். (FIR Copy)
5. இறப்புச் சான்று (Death Certificate)
6. வாரிசுச் சான்று (Legal Hair Certificate)
7. மாணவ/மாணவியர் மற்றும் பெற்றோர் ஆதார் அட்டையின் நகல். (Aadhar Card Xeror Copy)
8. பலத்த அல்லது சிறிய காயம் அடைந்த மாணவர்களுக்கு நிவாரண உதவி பெறுவதற்கு பாதிப்பு அடைந்த மாணவரின் முழு புகைப்படம்.
9. மருத்துவரின் சான்று
10. மாவட்டக்கல்வி அலுவலரின் பரிந்துரை கடிதம்.
11. முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரை கடிதம்.

மேற்காணும் இணைப்புகளுடன் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து கருத்துருக்களை மாவட்டக்கல்வி அலுவலகம் வழியாக பெறப்பட்டு முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் இரு நகல்களில் கருத்துருக்கள் பள்ளிக்கல்வி

Scanned by CamScanner

க்ககத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என மீளவும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

பார்வையில் காணும் அரசாணையின் நகல்.

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்.

நகல்

அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பிவைக்கப்படுகிறது.

Scanned by CamScanner

கருக்கம்

பள்ளிக் கல்வி—அரசு/அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் எதிர்பாராத விபத்துக்களினால் இறந்தாலோ அல்லது பலத்த காயங்கள் ஏற்பட்டாலோ பாதிப்பு அடையும் மாணவ / மாணவியர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் பக5(2) துறை.

அரசாணை (நிலை) எண். 17 நாள்: 07.02.2018.

(திருவள்ளுவராண்டு 2049 தை 25)

படிக்கப்பட்டவை:–

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.019344/எம்/இ2/2017, நாள் 08.05.2017.

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், 2016–17ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 37,201 அரசுப் பள்ளிகளும் மற்றும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 8,402 அரசு உதவி பெறும் பள்ளிகளும், ஆக மொத்தம் 45,603 பள்ளிகள் செயல்படுகின்றன எனவும், மேற்படி அரசுப் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை 55,73,217 மாணாக்கர்களும், அரசு உதவிபெறும் பள்ளிகளில் 29,51,084 மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர் எனவும், தமிழகத்தில் உள்ள பள்ளி மாணவர்கள் தரமான கல்வி பயில்வதற்கும், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை உறுதிப்படுத்திடவும் தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது எனவும், பள்ளி மாணவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கு செல்லும் போதும், பள்ளியிலிருந்து வீட்டிற்கு திரும்பச் செல்லும் போதும், உரிய பாதுகாப்புடன் சென்றுவரும் பொருட்டு, பள்ளிக் கல்வி இயக்ககத்திலிருந்து அவ்வப்போது அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டு வருகின்றன எனவும், இருப்பினும் இடைப்பட்ட பள்ளி நேரத்தில் கீழ்க்காணும் எதிர்பாராத விபத்துக்களினால் பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு பலத்த காயங்கள் அல்லது உயிர் சேதம் ஏற்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார் :–

- மாணவர்கள் பள்ளிக்கு வந்து செல்லும் போது ஏற்படும் விபத்து.
- கல்விச் சுற்றுலா செல்லும் போது ஏற்படும் விபத்து.
- நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, ஜுனியர் ரெட் கிராஸ், பாரத சாரண / சாரணிய இயக்கம் மற்றும் சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலமாக நடைபெறும் முகாம் மற்றும் பேரணிகளில் கலந்து கொள்ளும் போது ஏற்படும் விபத்து.
- விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும்போது ஏற்படும் விபத்து.
- மின்கசிவு மற்றும் ஆய்வகங்களில் ஏற்படும் விபத்து.
- விஷஜந்துக்களால் ஏற்படும் விபத்து.
- மாணவர்கள் விடுமுறை நாள்களில் வெளியே செல்லும் போது நீர்நிலைகளால் ஏற்படும் விபத்து போன்றவை.

Scanned by CamScanner

2) மேற்காணும் சூழ்நிலையில் தவிர்க்க முடியாமல் மாணவ / மாணவியருக்கு விபத்துகள் ஏற்பட்டு பாதிப்பு உண்டாகிறது எனவும், இதனால் குழந்தையை இழந்து பெற்றோர்கள் மிகவும் வேதனை அடைகின்றனர் எனவும், எனவே குழந்தையை இழந்து வாழும் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்க வேண்டியது அவசியமாகிறது எனவும், இத்தகைய நிகழ்வுகளின் போது பாதிப்பு அடையும் மாணவ / மாணவியர்களுக்கும் அல்லது உயிர்சேதம் ஏற்படின் அவர்களின் குடும்பத்திற்கும் உதவித் தொகை வழங்குவது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையுமென்பதால், விபத்தில் காயம் அடையும் அல்லது மரணமடையும் பள்ளி மாணவர்களுக்கு பின்வருமாறு நிவாரணத் தொகை நிர்ணயம் செய்து மாணவ / மாணவியர்களின் பெற்றோர்களுக்கும் / பாதுகாவலர்களுக்கும் அரசிடம் பெற்று பள்ளிக் கல்வி துறையின் மூலம் நிவாரணம் வழங்கிட ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ. எண் | விபத்தின் தன்மை | இழப்பீடு |
|---|---|---|
| 1 | விபத்தில் மரணமடைந்த மாணவர்களுக்கு | ரூ.1,00,000/- |
| 2 | விபத்தில் பலத்த காயம் அடைந்த மாணவர்களுக்கு | ரூ.50,000/- |
| 3 | விபத்தில் சிறிய காயம் அடைந்த மாணவர்களுக்கு | ரூ.25,000/- |

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் எதிர்பாராத விபத்துக்களினால் இறந்தாலோ அல்லது பலத்த காயங்கள் ஏற்பட்டாலோ பாதிப்பு அடையும் மாணவ / மாணவியர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகை நிர்ணயம் செய்து உயிரிழந்த / காயம் அடைந்த மாணவர்களின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணத் தொகை வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது :-

(i) அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் எதிர்பாராத விபத்துக்களினால் மரணம் அடைந்தால் ரூ.1,00,000/-ம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்), பலத்த காயமடைந்தால் ரூ.50,000/-ம் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் சிறிய காயம் அடைந்தால் ரூ.25,000/-ம் (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) என உயிரிழந்த / காயம் அடைந்த மாணவர்களுடைய பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு நிவாரணத் தொகை பள்ளிக் கல்வித் துறை மூலம் வழங்கப்பட வேண்டும்.

ii) மாணவ / மாணவியர்களுக்கு, பள்ளிகளிலும் / பள்ளி செல்லும் போதும் / சுற்றுலா செல்லும் போதும் / பள்ளியின் செயல்பாடுகளின் போதும் / எதிர்பாராத விதமாக, விபத்துக்களினால் மரணம் / காயம் ஏற்பட்டால் நிவாரணம் வழங்கப் படவேண்டும்.

Scanned by CamScanner

4. மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கான செலவினத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

2202- பொதுக் கல்வி 02 இடைநிலைக் கல்வி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AU அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு எதிர்பாராத விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்பு / பலத்த காயம் / சிறிய காயம் அடைந்தவர்களுக்கு நிதியுதவி வழங்குதல் - 09-உதவி தொகை - 03- குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(கு.தொ.கு.2202-02-800 AU -0933)

5) மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கான செலவினம் ஒரு "புதுப்பணித் திட்டம்" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு பொது-I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்குத் தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963ல் உள்ள அட்டவணை A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு-செலவு பொது-I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017-18 ஆம் ஆண்டிற்கான துணை / இறுதி மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வரவு-செலவு பொது-I / கல்வி-II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.4893/கல்வி-II/2017, நாள்:07.02.2018ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2676 (இரண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தாறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், சென்னை-6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை-6.
முதன்மைச் செயலாளர் (ம) வருவாய் நிருவாக ஆணையர், வருவாய்த் துறை, சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை-5.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

Scanned by CamScanner

சம்பளக் கணக்கு அலவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்ட கருவூல / சார் கருவூல அலுவலர்கள்.
நகல்
அரசு முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர்
நலத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டம் துறை, சென்னை –9.
அரசு செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –9.
அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டம் மற்றும் செயலாக்கத் துறை, சென்னை–9.
நிதி (கல்வி –II / வ.செ.பொ.I / II / CMPRF) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வி (வ.செ. / அநமு )துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலைத் முதன்மைச் தனிச் செயலர்,
பள்ளிக் கல்வித்துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 7-2-18

7/2/18

Scanned by CamScanner